# "அன்பின் புதிய விதி - ஆற்றலின் அரிய விதி இணையில்லா உதயநிதி வாழ்க!"



உன்னைப்போல் இளந்தலைவன்
உலகில் யாருமில்லை!
என்னைப்போல் இருப்போர்க்கு
நீயே காவல் எல்லை!

அன்பு மணம் வீசும்
ஆரூர் கொடி முல்லை!
பண்பில் ஒளி வீசும்
உனக்கு ஈடு இல்லை!

திராவிட மாடல் அரசைச்
சீர்குலைக்க நினைப்போர்க்கு
அரா விடமாய்த் திகழும்
ஆற்றல் மிகுதலைவன் நீ!

தாரதரம் எண்ணி
தமிழ்நாட்டில் தாமரையை
இரா வணம் செய்ய வந்த
எரிதழல் சூரியன் நீ!

காலை உணவுத் திட்டம்
கலைஞர் மகன் கொண்டு வந்தார்!
சீலமிகு அவருக்குச்
சிறந்த மகன் நீதானே!

விளையாட்டுத் துறையில்
விரிந்த புகழ் பெற்றது வாய்
தமிழ்நாட்டை உயர்த்த வந்த
தலை மகனும் நீ தானே!

முப்பெரும் விழா கண்ட கழகத்திற்கு
அறிவுத் திருவிழா கண்டவனே!
ஒற்றைச் செங்கல் உயர்த்திக் காட்டி
எதிரியைக் களத்தில் வென்றவனே!

எதிர்கால தி.மு.க.வும் தமிழகமும்
இனிமேல் உந்தன் கையில்தான்!
உதிர்காலம் என்பதெல்லாம்
உன்னை எதிர்க்கும் பகைமைக்குத்தான்!

சதிகாரக் கூட்டத்தின்
சாகசங்கள் பலிக்காது!
ஆகாயத்தின் நீலம்
என்றைக்கும் அழியாது!

களைப்பறியா உழைப்பில்
கலைஞரைப் போன்றவன் நீ!
முளைப்பாரி போல
முகம் மலர்ந்து நிற்பவன் நீ!

மூத்தோர் இளையோரை
முறையாக ஆதரித்து
காத்து அருள்கின்ற
காருண்யத் தலைவன் நீ!

எதிரியைக் கூட
இனிய சிரிப்போடு
அதிரமாய்த் தாக்கும்
அரசியல் சமர்த்தன் நீ!

உதயநிதி நீ வாழ்க!
உன்மையுள்ள எங்களின்
இதயநிதி நீ வாழ்க!
இனமானத் தமிழாக
என்றென்றும் நீ வாழ்க!



**கவிஞர் காசிமுத்து மாணிக்கம்**

# நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் கேள்வி!

## நேற்று (01.12.2025) நிகழ்வுகள்!



**1. மத்திய பல்கலைக் கழகங்களில் பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படுகிறதா? ?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு முறையாகப் பின்பற்றப்படு கிறதா? கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்விக்கு கல்வித் துறை இணையமைச்சர் பதில்!

திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மத்திய பல்கலைக் கழகங்களின் பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு முறையாக பின்பற்றப்படுகிறதா என மக்களவையில் எழுத்துபூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.

இது தொடர்பாக அவர், "ஒன்றிய அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்ட மத்திய பல்கலைக்கழகங்களில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பிற துறை ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

இந்த ஊழியர்களில் பொது, பொருளாதாரத்தில் பின் தங்கிய முற்பட்ட வகுப்பினர், பட்டியல், பழங்குடி வகுப்பினர், ஓபிசி வகுப்பினர் எத்தனை பேர் பிரநிதித்துவம் பெற்றுள்ளனர்?


கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்திய பல்கலைக் கழகங்களில் நடத்தப்பட்ட ஆசிரியர் பணி மற்றும் ஆசிரியர் அல்லாத பிற பணிகளுக்கான ஆட்சேர்ப்பு விவரங்கள் மேற்குறிப்பிட்ட பிரிவு வாரியாக எவ்வளவு? பணியிடங்களில் காலியிடங்கள் மற்றும் நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பிரிவு வாரியாக எவ்வளவு?

மத்திய பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீடு அளவுகோல்களின்படி பட்டியல், பழங்குடியின, ஓபிசி பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களின் விகிதம் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் என்ன?

மத்திய பல்கலைக் கழகங்களில் பட்டியல், பழங்குடியின, ஓபிசி பிரிவுகளைச் சேர்ந்த பேராசிரியர்களின் விகிதத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள், அதன் பலன்கள் என்ன?" என கனிமொழி கருணாநிதி எம்பி. கேள்விகளைத் தொடுத்திருந்தார்.

**2. பிரதமர் மக்கள் நிதி திட்டத்தில் பயனடைந்ததா தமிழ்நாடு?**

**காஞ்சிபுரம் ஜி.செல்வம், – சி. என். அண்ணாதுரை – தங்கதமிழ்செல்வன் – டி. மலையரசன்– கணபதி ராஜ்குமார்**


தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட மொத்த பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) கணக்குகள் மற்றும் ரூபே டெபிட் கார்டுகளின் எண்ணிக்கை குறித்து மேலே குறிப்பிட்ட திமுக எம்.பிக்கள் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதில் அவர்கள், கிராமங்களில் ஐந்து கிலோமீட்டருக்குள் வங்கிக் கிளைகள் உள்ளனவா? என்றும் ரூபே கார்டுகள், டிஜிட்டல் பணம் செலுத்துதல் மற்றும் நேரடி பண பரிமாற்றத்தை ஊக்குவிக்க கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட நிதி கல்வியறிவு குறித்த முகாம்களின் எண்ணிக்கை என்ன என்றும் கேட்டுள்ளனர்.

மேலும் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் நிதி சேர்க்கையை மேம்ப டுத்த, PMJDY பயன்பாட்டை வலுப்ப டுத்த மற்றும் டிஜிட்டல் பரிவர்த்த னைகளை மேம்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? செயலற்ற நிலையிலும் குறைந்தபட்ச இருப்புநிலை இல்லாத நிலையிலும் உள்ள PMJDY கணக்குகளின் எண்ணி க்கை என்ன? ஆதார் மற்றும் மொபைல் எண்களுடன் இணைக்க ப்பட்ட கணக்குகளின் சதவீதம் மற்றும் DBT பெறுபவர்களுடன் செயலில் பயன்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்? பிராந்திய ஏற்ற த்தாழ்வுகளை கலையும் நடவடிக்கைகள்? குறிப்பாக பெண்கள் மற்றும் விளிம்புநிலைக் குழுக்களுக்களில் இதன் தாக்கத்தை மதிப்பிட அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆய்வுகள் என்ன? பூஜ்ஜிய இருப்பு, குறைந்த இருப்பு மற்றும் செயலற்ற கணக்குகளைக் கொண்ட PMJDY கணக்குகளின் விவரங்கள் மற்றும் NER மற்றும் தேசிய அளவில் சராசரி வைப்புத்தொகை மற்றும் பரிவர்த்தனை அதிர்வெ ண்ணை மதிப்பிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர்கள் எழுப்பியுள்ளனர்.

**3. 2036 இல் கோடைகால ஒலிம்பிக்கை நடத்துகிறதா இந்தியா?**

**தமிழச்சி தங்கபாண்டியன்**



2028இல் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 இல் ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் ஆகிய இடங்களில் நடைபெறும் அடுத்த இரண்டு ஒலிம்பிக் அட்டவணைகளில் விளையாட்டு வீரர்கள் சிறப்பாக செயல்பட அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ள புதிய பயிற்சிகள் குறித்து திமுக தென்சென்னை எம்.பி தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் 2036இல் கோடைகால ஒலிம்பிக்கை நடத்த இந்தியா ஆர்வமாக உள்ளதா என்றும் அப்படியானால் அதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள முயற்சிகள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார். .




**4. பிரதமர் போஷான் திட்டத்தினால் மாணவர்களுக்கு பயன் என்ன?**

**காஞ்சிபுரம் ஜி.செல்வம் – சி.என்.அண்ணாதுரை**

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் PM POSHAN திட்டத்தின்கீழ் பயன்பெறும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை குறித்து மக்களவையில் திமுக எம்.பிக்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு.

மேற்கூறிய மாவட்டங்களில் குழந்தைகளின் வருகை, சேர்க்கை மற்றும் ஊட்டச்சத்து நிலை ஆகியவற்றில் PM POSHAN திட்டத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்கம் நடத்திய ஆய்வுகள் என்ன? பள்ளிகளில் ஊட்டச்சத்து பூங்காக்கள் நிறுவப்பட்டு இந்த மாவட்டங்களில் உள்ள திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து பள்ளிகளிலும் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளதா? காஞ்சிபுரத்தில் 'உள்ளூர் சந்தை' முயற்சியின்கீழ் உள்ளூரில் விளைந்த மற்றும் சத்தான உணவுப் பொருட்களின் பயன்பாட்டை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? இந்த மாவட்டங்களின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் PM POSHAN திட்டத்தின் கீழ் உணவின் தரம், உள்கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை மேம்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**5. ஜிஎஸ்டி இழப்பீடு நிறுத்தம் மாநிலங்களில் இழப்புக்கு ஒன்றிய அரசின் பதில் என்ன?**



**அருண் நேரு கேள்வி**

ஜூன் 2022க்கு பிறகு ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) இழப்பீட்டை நிறுத்துவது குறித்த விவரங்கள் கேட்டு பெரம்பலூர் மக்களவை தொகுதி உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஜிஎஸ்டி இழப்பீட்டை நிறுத்துவதற்கு அரசு குறிப்பிட்டும் காரணங்கள் என்ன? ஜிஎஸ்டி இழப்பீடு நிறுத்தப்பட்டதன் விளைவாக தமிழ்நாடு அரசுக்கு ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட ஆண்டு வருவாய் இழப்பு எவ்வளவு? இந்த இழப்பை மாநிலத்திற்கு ஈடுசெய்ய அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும் அல்லது முன்மொழியப்படும் நடவடிக்கைகள் மற்றும் அதன் விவரங்கள் என்ன? எனவும் அவர் கேட்டுள்ளார்..

## உத்திரமேரூர் தொகுதி காவித்தண்டலம் ஊராட்சியில்

# பள்ளிக்கு புதிய கட்டிடம்: க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

## ஒன்றியச் செயலாளர் டி.குமார் – கழகத்தினர் பங்கேறபு!

காஞ்சிபுரம், டிச. 2 - காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், காவித் தண்டலம் ஊராட்சி காவூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்படுகிறது. இப்பள்ளிக்கு போதிய வகுப்பறை கட்டிடம் இல்லாமல் இருந்து வந்தது மேலும் பழைய கட்டிடம் சேதம் அடைந்தும் இருந்தது இதனால் இந்த கட்டிடத்தை அகற்றிவிட்டு புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க. சுந்தரிடம் அப்பகுதி மக்கள் மனு அளித்திருந்தனர்.


இந்த மனுவினை பரிசீலனை செய்து பள்ளிக் கல்வித் துறை சார்பில் இரண்டு அடுக்குடன் கூடிய நான்கு அறைகளைக் கொண்ட புதிய வகுப்பறை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைத்து பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் சாலவாக்கம் ஒன்றிய செயலாளர் டி. குமார், இந்திரா மோகன், முன்னாள் ஒன்றிக் குழுத் தலைவர் கு. துரைவேலு, ஊராட்சி மன்ற தலைவர் வெங்கட்ராமன், நிர்வாகிகள் பாலமுருகன், மோகன், பழனி, கங்கா உள்ளிட்ட மன்ற உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.எஸ்.கே. ராஜேந்திரன்**
**டிசம்பர் 2 (1990)**



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

"இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு" எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 285-வது நாள்!

## அம்பத்தூர் தெற்கு பகுதியில் – உணவு வழங்கப்பட்டது!

சென்னை, டிச.2–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 285 ஆம் நாளான – கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (01.12.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 90, காமராஜ் நகர், பாடி குப்பம் ரோடு, 2) வட்டம் 93, கங்கையம்மன் நகர், பிரதான சாலை சாய்பாபா கோவில் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து



சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், பு. வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த. கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன் குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# திரு.வி.க. நகர் தொகுதியில் மழை வெள்ள நிவாரணப் பணி!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. மேற்கொண்டார்!

*சென்னை, டிச.2-*

*திரு.வி.க நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில்.. கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ கடுமையான மழை காரணமாக முன்னெச்ச ரிக்கை நடவடிக்கையாகவும் மற்றும் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பணிகளையும் மேற்கொண்டார்..*

*மழை நீர் சூழ்ந்த பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றி மாநகராட்சி பள்ளிகளில் தங்க வைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் அதற்கு தயாரான வகையில் சென்னை மாநகராட்சி பள்ளியில் பொது மக்களுக்கு வேண்டிய பாய், போர்வை,தலையணை மற்றும் உணவு தயாரிக்கும் பணிகளை ஆய்வு செய்தார்.*



*அதனை தொடர்ந்து வார்டு எண்:76 ல் உள்ள அங்காளம்மன் கோயில் தெருவில் சூழ்ந்திருந்த மழை நீரை வெளியேற்றும் பணியினை பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார். அதனை தொடர்ந்து கே.எம். கார்டன் பகுதியில் தேங்கியிருக்கும் மழைநீரை வெளியேற்றுவது தொடர்பாக டிமலஸ் சாலையில் தண்ணீர் வெளியேற்றும் பணியினையும் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்.*

*அதனை தொடர்ந்து, வார்டு எண்:75-க்குட்பட்ட ஓட்டேரி எஸ்.எஸ்.புரம் B பிளாக் பகுதியில் தேங்கி நின்ற மழை நீருடன் கலந்திருந்த கழிவு நீரொ வெளியேற்ற குடிநீர் வாரிய அதிகாரிகளுடன் தெரு தெருவாக சென்று பார்வையிட்டு கழிவு நீரை வெளியேற்றும் பணிகளை மேற்கொண்டார்.*

*அதனை தொடர்ந்து வார்டு எண்:71-ல் உள்ள கணேசபுரத்தில் நடைபெற்று வருகின்ற சுரங்க பாதை பணியால் போக்குரத்துக்கு இடையூறாக தேங்கி நின்ற மழைநீரை அகற்றும் பணியினை தொடர்புடைய அதிகாரிகளுடன் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்.*

*வார்டு எண்:71-ல் உள்ள மேட்டுப்பாளையம் அருந்ததி நகரில் தேங்கி நின்ற மழை நீர் வெளியேற்ற மாநகராட்சி அதிகாரியுடன் சென்று நடவடிக்கை மேற்கொண்டார்.*

*அதனை தொடர்ந்து வார்டு எண்:71-ர் உள்ள பெரம்பூர் சுரங்க பாதையில் தேங்கி நின்றிருந்த மழைநீரை வெளியேற்றும் மின் மோட்டார் சரியான முறையில் இயங்கும் வகையில் பார்வையிட்டார்.*

*அதனை தொடர்ந்து வார்டு எண் 76-ல் உள்ள கே.எம்.கார்டன் பகுதியில் தெரு தெருவாக சென்று தேங்கி நின்ற மழை நீர் வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்டு ஜெய் நகர் பகுதியில் மின் மோட்டார் சரியான முறையில் இயங்கும் வகையில் பணிகளை மேற்கொண்டார்.*

*அதனை தொடர்ந்து ஸ்டரான்ஸ் ரோடு சென்னை மாநகராட்சி பள்ளியில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கிட நடைபெற்ற பணிகளை மேற்கொண்டார்.*